**TNPSC GROUP4 TAMIL MODEL QUESTION ANSWERS**

# தமிழ் இலக்கணம்

1) சொற்களை ஒழுங்குப்படுத்தி சொற்றொடராக்குக.

அ. கதிர் புலர பொழுது கூவ சேவல் எழுந்தது

*ஆ. சேவல் கூவ பொழுது புலர கதிர் எழுந்தது*

இ. பொழுது கூவ சேவல் எழுந்தது கதிர் புலர

ஈ. புலர பொழுது கூவ சேவல் எழுந்தது கதிர்

2) வயல் - பெயர்ச் சொல்லின் வகை அறிக.

*அ. இடப்பெயர்* ஆ. காலப்பெயர்

இ. பண்புப்பெயர் ஈ. பொருட்பெயர்

3) இகழ் - என்னும் வேர்ச்சொல்லின் வினையாலணையும் பெயரைத் தேர்ந்தெடுக்க.

அ. இகழ்தல் ஆ. இகழு

இ. இகழும் *ஈ. இகழ்வார்*

4) படி - என்னும் வேர்ச்சொல்லின் வினையெச்சத்தை தேந்தெடுக்க.

அ. படிக்கும் ஆ. படியும்

இ. படிப்பதற்கு *ஈ. படித்து*

5) உழு - என்னும் வேர்ச்சொல்லின் வினைமுற்றை தேர்ந்தெடுக்க.

*அ. உழுதார்* ஆ. உழுது

இ. உழுத ஈ. உழுதல்

6) அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க:

அ. தோழன், திருமுடி, தாண்டு, தூரிகை

*ஆ. தாண்டு, திருமுடி, தூரிகை, தோழன்*

tnpscmodelquestionpaper.blogspot.in

இ. தாண்டு, திருமுடி, தோழன், தூரிகை

ஈ. தூரிகை, தோழன், தாண்டு, திருமுடி

7) Principle என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான தமிழ்ச்சொல்லைத தேர்ந்தெடுக்க.

அ. முதல்வர் | ஆ. *கொள்கை*

இ. அதிகாரி | ஈ. நோக்கம்

8) ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளைத் தேர்க: பெறுக்கல் - பெருக்கல்

அ. மயானம் - அரிசி | ஆ. வாய்க்கால் - எலி

இ. பேராற்றல் - யானை | ஈ. *பொறுக்கல் - அதிகப்படுத்துதல்*

9) பொருந்தாச் சொல்லைக் கண்டறிக:

அ. நண்பகல் | ஆ. *கார் காலம்*

இ. ஏற்பாடு | ஈ. வைகறை

10) பிரித்து எழுதுக: தொல்லுலகம்

அ. தொல் + உலகம் | ஆ. *தொன்மை + உலகம்*

இ. தொண் + உலகம் | ஈ. தொன் + உலகம்

11) எதிர்ச்சொல் தருக: அண்டி

அ. மண்டி | ஆ. *விலகி*

இ. காண்டி | ஈ. தாண்டி

12) எதிர்ச்சொல் தருக: நல்வினை

அ. நல்லவினை | ஆ. செய்வினை

இ. நன்மை | ஈ. *தீவினை*

tnpscmodelquestionpaper.blogspot.in

13) பசுமை - பெயர்ச் சொல்லின் வகை அறிக.

அ. தொழிற்பெயர் ஆ. காலப்பெயர்

*இ. பண்புப்பெயர்* ஈ. சினைப்பெயர்

14) படுகை - பெயர்ச் சொல்லின் வகை அறிக.

அ. பண்புப்பெயர் ஆ. பொருட்பெயர்

இ. காலப்பெயர் *ஈ. இடப்பெயர்*

15) அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க:

அ. முன்பனி, மாதம், மேலாளர், மைத்துனி

ஆ. மைத்துனி, மேலாளர், முன்பனி, மாதம்

இ. மாதம், முன்பனி, மேலாளர், மைத்துனி

*ஈ. மாதம், முன்பனி, மைத்துனி, மேலாளர்*

16) ஒலி வேறுபாடறிந்து சரியான பொருளைத் தேர்க: தண்மை -தன்மை

*அ. குளிர்ச்சி - இயல்பு* ஆ. தன்னை - அருகில்

இ. இயல்பு - குளிர்ச்சி ஈ. தண்ணீர் - தனிமை

17) பிரித்து எழுதுக: ஊராண்மை

அ. ஊராண் + மை *ஆ. ஊர் + ஆண்மை*

இ. ஊர் + ஆள்மை ஈ. ஊ + ஆண்மை

18) எதிர்ச்சொல் தருக: இன்சொல்

*அ. வன்சொல்* ஆ. மென்சொல்

இ. கடுஞ்சொல் ஈ. தன்சொல்

tnpscmodelquestionpaper.blogspot.in

19) செய்வினை சொற்றொடரைக் கண்டறிக

அ. கட்டுரை கனிமொழியால் எழுதப்பட்டது

*ஆ. கனிமொழி கட்டுரை எழுதினாள்*

இ. கட்டுரை கனிமொழி எழுதுவித்தாள்

ஈ. கனிமொழி கட்டுரை எழுதுவாள்

20) தன்வினை சொற்றொடரைக் கண்டறிக

*அ. கயல்விழி தேர்வுக்கு படித்தாள்*

ஆ. கயல்விழி தேர்வுக்குப படி

இ. கயல்விழி தேர்வுக்குப படிப்பித்தாள்

ஈ. கயல்விழி தேர்வுக்குப படிப்பாள்

21) பை - என்னும் ஓரெழுத்து ஒரு மொழிக்குரிய பொருள் யாது?

*அ. பச்சை* ஆ. வெள்ளை

இ. கருப்பு ஈ. நீலம்

22) போவாள் - இச்சொல்லின் வேர்ச்சொல்லைக் காண்க.

அ. போதல் *ஆ. போ*

இ. போன ஈ. போகும்

23) உழைப்பால் வறுமை ஓடியது - எவ்வகை வாக்கியம் எனச் சுட்டுக.

*அ. தன்வினை வாக்கியம்* ஆ. பிறவினை வாக்கியம்

இ. கட்டளை வாக்கியம் ஈ. செயப்பாட்டு வினை வாக்கியம்

24) மழை கண்ட பயிர் போல - உவமையால் விளக்கப் பெரும் பொருத்தமானப் பொருளைத் தேர்ந்தெடுக்க.

அ. துன்பம் ஆ. வறுமை

இ. அச்சம் *ஈ. மலர்ச்சி*



tnpscmodelquestionpaper.blogspot.in

25) கொடுப்பதுஉம் - என்பதன் இலக்கணக் குறிப்பு தேர்க

அ. *இன்னிசை அளபெடை* ஆ. சொல்லிசை அளபெடை

இ. செய்யுளிசை அளபெடை ஈ. ஒற்றளபெடை

26) விடைக்கேற்ற வினாவைத் தேர்ந்தெடு: பாரதியார் தேசியக் கவி என்று அழைக்கப்பட்டார்.

அ. பாரதியார் பாடிய நூல்கள் யாவை?

ஆ. *பாரதியார் எவ்வாறு அழைக்கப்பட்டார்?*

இ. தேசியக் கவியா பாரதியார்?

ஈ. பாரதியாரின் பெற்றோர் யார்?

27) மா - என்னும் ஓரெழுத்து ஒரு மொழிக்குரிய பொருள் யாது?

அ. சிறிய ஆ. குறுகிய

இ. *பெரிய* ஈ. அம்மா

28) வருகின்றனன் - இச்சொல்லின் வேர்ச்சொல்லைக் காண்க.

அ. *வா* ஆ. வரும்

இ. வந்த ஈ. வந்து

29) தமிழ் மூவேந்தர்களால் வளர்க்கப்பட்டது - எவ்வகை வாக்கியம் எனச் சுட்டுக.

அ. பிறவினை வாக்கியம் ஆ. *செயப்பாட்டு வினை வாக்கியம்*

இ. தன்வினை வாக்கியம் ஈ. செய்வினை வாக்கியம்

30) வெரூஉம் - என்பதன் இலக்கணக் குறிப்பு தேர்க.

அ. ஆகு பெயர் ஆ. *அளபெடை*

இ. முற்றெச்சம் ஈ. ஈற்றுப்போலி

tnpscmodelquestionpaper.blogspot.in